Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 11 (26-11-1992) வியாழக்கிழமை ஓசை 282

## பிறப்பு சான்றிதழ்கள் துரிதமாக வழங்க முயற்சி

யாழ், செயலகத்தில் தேங்கி இருக்கும் பிறப்பு சான்றிதழ் விண்ணப்பங்களை இவ்வாண்டு முடிவடைவதற்குள் வழங்கும் துரித நடவடிக்கையொன்றை யாழ் செயலகம் மேற்கொண்டு வருவதாக தெரிய வருகின்றது. பல மாதக் கணக்காக தேங்கி இருக்கும் விண்ணப்பங்களை இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்து மக்களுக்கு வழங்கும் நோக்குடன் சுழற்சி முறையில் யாழ். செயலகத்தின் ஏனைய பகுதி ஊழியர்களும் இப்பிரிவுக்கு உதவிசெய்து வருகின்றனர். நேற்று சமூகதிணைக்களம் மற்றும் புனர்வாழ்வு பகுதியை சேர்ந்த சுமார் 25க்குமேற்பட்ட ஊழியர்கள்இதில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் தாக்குதல்: கொழும்பில் அதிர்ச்சி

# ராணுவ உயர் அதிகாரிகள் பலாலி விரைவு

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் பலாலி இராணுவ தளத்தின் கிழக்கு எல்லையோரத்தின் மீது மேற்கொண்ட பாரிய தாக்குதல் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இத்திடீர்த் தாக்குதலைத்தொடர்ந்து இராணுவ உயர் அதிகாரிகள் பலர் பலாலிக்கு நேற்றுத் திடீர் விஜயங்களை மேற்கொண்டதோடு, தாக்குதல் நடந்த பகுதிகளை உலங்குவானூர்தியிலிருந்து பார்வையிட்டதாகவும் தெரியவருகின்றது.

## 4 இராணுவ வாகனங்கள் அழிப்பு படையினர் உயிரிழப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் கிழக்கு எல்லையோரத்தின் காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் முன்னர் அறிவித்ததைக் காட்டிலும் ஏற்பட்ட உயிர், தளபாட இழப்புக்கள்பாரியதென பின்னர் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் 37 இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாக அறிவித்த பாதுகாப்பு வட்டாரங்கள் தற்பொழுது கொல்லப்பட்ட இராணுவத்தினர் தொகை 53 என அறிவித்ததோடு பலர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது ஆனால், சுயாதீனமான செய்திகள் கொல்லப்பட்டஇராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமெனத் தெரிவிக்கின்றன.

இதேவேளை சமீப காலங்களில் ஒரு நாள் தாக்குதலில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினருக்கு இழப்பு ஏற்பட்டது இந்தத் தாக்குதல் நடவடிக்கையிலேயே எனவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்தோடு, இத் தாக்குதலின் போது, விடுதலைப்புலிகளால் சாலடின் கவசவாகனம் ஒன்றும், மூன்று இராணுவ ரக வண்டிகளும் அழிக்கப்பட்டதாகவும், மேலும் பல இராணுவ வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது

இதேவேளை இத் தாக்குதலில் பீரங்கி ஒன்றும்புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது தெரிந்ததே.

## மேலும் 10 புலிகள் பலாலியில் வீரச்சாவு

பலாலி படைமுகாம் கிழக்கு எல்லையில் விடுதலைப் புலிகள் கடந்த திங்கள் இரவு போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலி

## அனுரதபுர விமான தளத்தில் குண்டு வெடிப்பு சம்பவம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் விமானத் ... பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டு வெடிப்பினால்

## புதிய மாணவர் மீது தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் புதிய மாணவர்ஒருவர் மீது சிரேஷ்ட மாணவர் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முதலாம் ஆண்டு கலைப் பீட மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் விரிவுரைக்குச் சென்ற சமயம் அவரை இடைமறித்த சிரேஷ்ட மாணவர் கும்பலின் ஒருவர் அந்த மாணவரைக் கண்டபடி தாக்கியுள்ளார். இத் தாக்குதல் எந்த விதக் காரணமும் இன்றி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக சம்பந்தப்பட்ட மாணவர் குழம்பிய நிலையில் காணப்பட்டார்.

நேற்று நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் சிரேஷ்ட மாணவர் ஒருவர் புதிய மாணவர் ஒருவரை ச்ஷேர்ட்டில் பிடித்து இழுத்து அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## தாக்குதல்

கிளாலிக் கடற் பிராந்தியத்தில் இருந்து திங்கள் இரவு சிறிலங்கா கடற்படையினர் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல் நடாத்தினர்.

## தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் இன்று



தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் 39-வது பிறந்த தினம் இன்றாகும்.

...ள் கடந்த திங்கள் இரவு நடாத்திய பெரும் தாக்குதலின் போது மேலும் பத்து

...க்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

...அநுராதபுரம் விமானத் தளத்தில் நேற்று குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்...

இக்குண்டு வெடிப்பினால் அப்பகுதி முழுவதும் அதிர்ந்ததாகவும் இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# மேலும் மீட்கப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமின் கிழக்குப் புற காவலரண்கள் மீது டந்ததிங்கட் கிழமை இரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத்தொடர்ந்துநேற்றுமுன்தினம் அப்பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளால் மேலும் பெருமளவு இராணுவத் தளபாடங்கள் மீட்கப்பட்டன.

கிழக்குப் புறக் காவலரண் பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட மேலதிக ஆயுத தளபாட விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ரி. 56-1 ரக துப்பாக்கி | - | 01 |
| ★ நடுத்தர ரவைகள் | - | 19820 |
| ★ நடுத்தர ரவைகள் லிங்குடன் | - | 102 |
| ★ நேற்ரோ ரவைகள் | - | 2157 |
| ★ 7.92 லிங்குடன் ரவைகள் | - | 565 |
| ★ 40 எம். எம். எறிகணை | - | 32 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | - | 24 |
| ★ புகைக்குண்டு | - | 01 |
| ★ டப்பி மைன்ஸ் | - | 150 |
| ★ பரா லைட் | - | 05 |
| ★ 60 எம். எம். எறிகணை | - | 25 |
| ★ ரி 81 ரைபிள் கிரனேற் | - | 25 |
| ★ ஏ கே. மகசீன் | - | 50 |
| ★ ஜி 3 மகசீன் | - | 20 |
| ★ 81 மி. மீ எறிகணை | - | 10 |
| ★ ஓமுழவைப் பொறி வெடி | - | 07 |
| ★ மிதிவெடி பூஸ்ரர் பெட்டி | - | 04 |
| ★ ஆர். பி ஜி. ஸ்கோப் | - | 02 |
| ★ மோட்டர் ஸ்கோப் | - | 05 |
| ★ பைனாகுலர் | - | 04 |
| ★ நைற் விஷன் | - | 02 |

இதேவேளை திங்கள் இரவு கைப்பற்றப்பட்ட ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகசீன்களின் எண்ணிக்கை - 82 ஆகும்.

# திருமலையில் படைமீது தாக்குதல் ஓர் இராணுவம் பலி; ஆயுதம் மீட்பு

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்று காலை 7 35 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாகுதலில் ஓர் இராணுவம் பலியாகியது ஏனையோர் காயங்களுடன் ஓடிவிட்டனர். இவர்களிடமிருந்து சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

திளர்சி இராணுவ முகாமிலிருந்து அரிப்புச் சந்திக்கு ரோந்து சென்று கொண்டிருந்த 20 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது அரிப்புச் சந்தியில இத்தாக்குதல நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

இததாக்குதலின் போது

| | | |
|---|---|---|
| ★ ஜி3 ஏ3 புஷ்பட் ரக துப்பாக்கி | - | 01 |
| ★ இதற்குரிய மகசின் | - | 05 |
| ★ நேட்டோ ரவைகள் | - | 200 |
| ★ ஜே. ஆர். கிரனைட் | - | 01 |
| ★ சப்பாத்து [சோடி] | - | 01 |
| ★ தொப்பி | - | 01 |
| ★ இராணுவப் பட்டி | - | 01 |
| ★ கத்தி | - | 01 |

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## கைதுசெய்ய முயன்றபோது குண்டை வெடிக்க வைத்து மரணம்

(கொழும்பு)

கொழும்புவிஜயராம மாவத்தையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக கூறப்படும் ஓர் இளைஞரை பொலிசார் சுற்றி வளைத்த போது அவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டார் எனவும், பின்னர் ஒரு வீட்டினுள் புகுந்து கைக்குண்டு ஒன்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்

இந்த இளைஞர் திம்பிரிசயகாய பகுதியில் ஜனாதிபதி பிரேமதாசாவின் செயலாளரான கே. எச். ஜே. விஜேதாசாவின் மெய்ப்பாது காவலர் சூடுபட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடை

( 4ஆம் பக்கம் பார்க்க )

## திருமலையில் வீரச்சாவு



கப்டன் சேகரன் (சுது)

திருக்கோணமலையில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் போராளி கப்டன் சேகரன் /சுது (ராஜப்பு அன்ரனி ராஜசேகர் - மூதூர், திருமலை) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இசை ஆராதனை

யாழ். கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலனிழந்தோர் பாடசாலையில் வருடாந்த நத்தார் இசை ஆராதனையும் கலை நிகழ்ச்சிகளும், நாளை மறுதினம் சனி கிழமைகாலை ஒன்பது மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

# தமிழீழ மாவீரர் நாள் இன்று நள்ளிரவு ஆரம்பம்

தமிழீழ மாவீரர்நாள் இன்று நள்ளிரவு நிலைமவலி எழுப்பலுடன் ஆரம்பமாகிறது. தமிழீழ மலர்விற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவு நாள் இன்று நள்ளிரவு 12 00 மணிக்கு ஆலயங்கள், தேவாலயங்கள் தோறும் மணி ஓசை ஒலிக்க ஆரம்பமாகவுள்ளது. இம் மணி ஓசை 12.02 வரை எழுப்பப்படவுள்ளது.

இவ் வேளையில் மக்கள் எழுந்து நின்று மாவீரருக்கு மௌன அஞ்சலி செலுத்தவுள்ளனர். அதேவேளை வீதியால் செல்பவர்கள் அவ்விடத்திலேயே தரித்து நின்று மௌன அஞ்சலி செலுத்துவர்.

அதனைத் தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றப்படவுள்ளது. அதே வேளை தமிழீழ மக்கள் அனைவரும் தங்கள இல்லங்களிலும் கோவில்கள், தேவாலயங்களி,

[4ஆம் பக்கம் பார்க்க]

# மாவீரர் துயிலும் இல்லத்தில் பெருமளவில் மக்கள் அஞ்சலி

## ஆனையிறவு தளத்தையும் பார்வையிடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயக விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியாகிய அயிரமாயிரம் மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரத்தின் ஐந்தாவது நாளாக நேற்று பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்கள் அணியணியாகத் திரண்டு சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்

மாவீரர் வாரத்தையொட்டி தமிழீழமெங்கும் ஏற்கனவே எழுச்சிமயமாகக் காட்சிபளிக்கின்றது. அத்துடன் தினந்தோறும் இவ்வெழுச்சிக் கோலம் அதிகரித்தவண்ணமுள்ளதாக தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள எமது பிராந்தியச் செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

### செம்மணியில் மக்கள் வெள்ளம்:

யாழ் கூடாவில் உள்ள செம்மணிவெளியில் இயற்கை வனப்புடன் ஒத்திசையும்வகையில் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கும் மாதிரி ஆனையிறவு சிறிலங்கா இராணுவ தளத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினசரி சென்றுகொண்டிருக்கின்றனர்

கடந்தஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்படி இராணுவ தளம்மீது நடாத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆகாய கடல் வெளித் தாக்குதலை உயிரோட்டத்துடன் மக்களுக்கு மேற்படி மாதிரி அமைப்பு எடுத்துக் கூறிக்கொண்டிருக்கின்றது

### மாவீரர் துயிலும் இல்லத்தில்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமும் விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ் இல்லத்துக்குச் செல்லும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் முக்கிய நிகழ்ச்சியாக இன்று மாவீரரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இன்று கோட்டரீதியாக அமைக்கப்பட்ட நிலையங்களில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து மாவீரர் சுடரேற்றல் நிகழ்விற்காக இவர்கள் மாவீரர்துயிலும் இல்லங்களிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

## வரி விளம்பரம்

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

### ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்)

புத்தம்புதிய ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (Oliviti Typriter English) விற்பனைக்குண்டு. கொழும்பு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், (Dilka Watch Works) பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி/5470)

### காணி விற்பனை

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 4 நாலு பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வீ. த. பாலசிங்கம் பலாலி வீதி, கோண்டாவில் (சி/3697)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி/5399)

### கண்டெடுக்கப்பட்டது

## மாவீரர் உருவப்படங்கள் பெற்றுக் கொள்ளலாம்

மாவீரர் தினத்தையொட்டி மேலும் சில மாவீரரது உருவப்படங்களை தமிழீழ மாவீரர் பணிமனை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

வீரவேங்கை மகான் (கதிரவேலு செல்வராசா கம்பர்மலை, வல்வெட்டித்துறை) வீரவேங்கை சகோபி (மகாதேவன் இளங்கோ - தும்பளை பருத்தித்துறை), வீரவேங்கை குலம் (வீரக்குட்டி சந்திரமோகன் - இருதயபுரம், மட்டக்களப்பு), வீரவேங்கை அன்சாரி (நிக்சலஸ் மைக்கல் குருஸ் - புனித செபஸ்தியார் வீதி, மன்னார்), வீரவேங்கை றமேஸ் (பாலசுப்பிரமணியம் செல்வராசா - கரணவாய் கிழக்கு, கரவெட்டி), வீரவேங்கை மயூரன் (குணசிங்கராசா துவாரகன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி) வீரவேங்கை சிவா (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் - மூளாய் தெற்கு, வட்டுக்கோட்டை) ஆகியோரது உருவப் படங்களே இவையாகும்.

சிறு அன்பளிப்பினை வழங்குவதன் மூலம் இவற்றை பெற்றுக் கொள்ளலாம் என மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது. மாவீரர் பட்டியலின் வரிசைப்படி இம்மாவீரரின் உருவப்படங்கள் அச்சிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் மாவீரர் வார கூட்டம்

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் இவ் வருடத்துக்கான மாவீரர் விழா நிகழ்ச்சியை இல 291 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான பணிமனையில் இன்று (26-11-92) வியாழக்கிழமை மாலை 6-30 மணியளவில் நடாத்த உள்ளது. இந் நிகழ்ச்சிக்கு யா. ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராக உள்ள திரு. கூசைப்பிள்ளை சிறில் அவர்கள் தலைமைதாங்க உள்ளார்.

இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்த உள்ளார்கள். இவ்விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பலாலி ஆசிரியர் கலாசாலையில் மாவீரர் எழுச்சிவிழா

மாவீரர் வார எழுச்சிவிழா பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றத்தினரால் இன்று காலை 9.00 மணியளவில் கலாசாலை சுப்பிரமணியம் மண்டபத்தில் சி. பத்மராஜன் அவர்கள் தலைமையில் நடை பெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக ஆர். எஸ் நடராஜா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இவர்களின் உரையினைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**புலமைப் பரிசில் வகுப்பு 1993**

கணிதம்: நயினை S. S. பிள்ளை

தமிழ்: சுந்தரலிங்கம்

**ஆரம்பம்: 05-12-92 (சனி)**

(சி-5461)

## நான்காவது ஆண்டு வீரஅஞ்சலி

வீரஜனனம் 31 - 03 - 1965 வீரச் சாவு 26 - 11 - 1988

யாழ்ப்பாணம் காரைநகர் வாசியும்
முன்னாள் முறிகண்டியான்
வைத்தியசாலை ஸ்தாபகரும்
காலஞ் சென்ற டாக்டர் கணபதிப்பிள்ளை
அவர்களின் அன்புப் பேரனும்
மகாலிங்கசூரியர் கனகேஸ்வரி அவர்களின்
சிரேஷ்ர புதல்வனும் வீரவேங்கையுமாகிய

**லெப். சூரியகுமார் (சூரி)**

காரைநகரில் இந்திய இராணுவத்துடனான
நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.
இவருக்கு எங்கள் வீர அஞ்சலியை
செலுத்துகின்றோம்.

சூரியர்- ஊளவு
தங்கோடை- காரைநகர்

குடும்பத்தினர் (3696)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 18 — 09 — 1930



மறைவு 28 — 10 — 1992

அமரர்

**முத்தர்-வேலுப்பிள்ளை**

[சங்கிலி]


(பிரபல வர்த்தகர்)

நாளை (27-11-92) வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சிவயோகராசா ஸ்ரோஸ்'
பழவத்தை,
பொலிகண்டி,

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## தேடுகிறேன் மகளே!



மகளே! உன்னைக்காணாமல் நான்படும் துயரம் கொஞ்சமில்லை. ஊண் உறக்கமின்றி உன்னைத் தேடுகிறேன். உடன் வந்து என்னைச் சந்தித்து ஆறுதல் தா

மகள் குமுதினியையும்,
பேர்த்தி பூவிதாவையும்
தேடி அலையும்
த. குழந்தைவடிவேல்

வாடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (3700)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

[26-11-92]

பிறப்பு 11 — 02 — 1969



இறப்பு 13 — 10 — 1992

செல்வன்

**நாகநாதன் நிர்மலநாதன்**

குலம் விளங்கும் உன்னாலே
குவலயத்தில் நாம் மகிழ்ந்தோம் - என்றிருந்தோம்
ஆனால்
மின்னலாய் உன் வாழ்வு முடிந்தபோது
சிந்திய கண்ணீர் எந்நாளும் காயாது

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
பேரன், பேர்த்தி, சித்தப்பா, சித்தி.

தழையம்பதி வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி. (3698)

## நினைவு கூருகின்றோம்...

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
[சி-3707]

வல்வெட்டித்துறை. (3700)

### கண்டெடுக்கப்பட்டது

பெறுமதி வாய்ந்த கை மணிக்கூடு வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. விபரங்களைக் கூறிப்பெற்றுக்கொள்ளுங்கள். அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (சி-5472)

### தவறிவிட்டது

முத்திரைச் சந்திக்கும் கந்தர் மடத்துக்கும் இடையில் அல்பம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் தயவுசெய்து ஒப்படைக்கவும். J ராஜ் (3710)

### 'களத்தீ' நூல் வெளியீட்டு விழா

கவிஞர் வேலணையூர் சுரேஷின் "களத்தீ" நூல் வெளியீட்டு விழா வரும சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் தலைவர் அ. பஞ்சலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இப் புத்தக வெளியீட்டினை வெ. இளங்குமரன் அவர்களும் முதற் பிரதியை இ. தவகோபால் அவர்களும் பெற உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கவிஞர் திரு. மு. வே யோ. வாஞ்சிநாதன் கவிஞர் சோ. பதமநாதன், நாக சண்முகநாத பிள்ளை கல்வயல் வே. குமாரசாமி ஆகிய பலரும் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

### மாவீரர் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கோட்டத்தின் மாவீரர் வாரக் கூட்டம் இன்று 7.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவித்தல் மற்றும் மாவீரர் நினைவுரைகளும் இடம்பெறுகின்றன.

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கோவில் வீதியில் திறப்புக் கோர்வையொன்று ச. உதயவிக்னேஸ்வரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சித்த மருத்துவத்துறை
1ம், 2ம், 3ம், இறுதி
பி. எஸ். எம். எஸ்.
மீள் பரீட்சை
டிசம்பர் 1992

மேற்படி பரீட்சைகள் டிசம்பர் 21ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதனால் அதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் சித்த மருத்துவத்துறைத் தலைவர் ஊடாக தமது விண்ணப்பங்களை டிசம்பர் மாதம் 1ம் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கிளைக்கு கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
(சி-5479)


நீர்வற்றா நிலாவரை........ பண்டிகை வைபவங்களா?
தரம் குன்றா சிவன் பேக்கரி...... வீட்டில் விசேட வைபவங்களா?

உங்கள் தேவை எமக்குப் புரிகின்றது.
உணவுத்தேவை, விருந்து வைத்து கௌரவிக்க பதற்றம்.
எதுவானாலும் வீண் பதற்றம் நன்மை தருமா?
கவலையை விடுங்கள்.

சிவன் பேக்கரியை நாடுங்கள்
தரத்தின் சின்னம் "சிவன்"

தித்திக்கும் சுவைகொண்ட......

★ பாண் ★ கேக் ★ கல்பணிஸ்
★ றோஸ்பாண் ★ ஐசிங்கேக் ★ பணிஸ்
★ பட்டர்பாண் ★ பேபிரஸ்க்

நினைப்பதை உடன்பெற தவறாமல் நாடுங்கள்
★ உங்கள் திருப்தி... ★ எங்கள் மகிழ்ச்சி...

விபரங்கள் அனைத்துக்கும்......

சிவன் பேக்கரி
நிலாவரை - புத்தூர்
(சி-5459)


## 1992-11-26

1985ஆம் ஆண்டு இருதயபுரம் பகுதியில் விசேட அதிரடிப்படையினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ராஜா (வின்சன்ட் இருதயபுரம்- மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். சூரி (மகாலிங்கம் சூரியகுமார்- காரைநகர் - யாழ். )

இதே பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

குமார் (சேகுதாவூது காசிம் - இரத்தினபுரம்- கிளிநொச்சி)

யாழ் பெரியகோயிலடியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

பெனி (ஞானப்பிரகாசம் பெனி - 532, நாவலர் வீதி- யாழ்ப்பாணம். )

மட்டக்களப்பு - ஆரையம்பதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

முரளி (பீதாம்பரம் நந்தகுமார்- ஆரையம்பதி- 03 மட்டக்களப்பு)

வட்டக்கச்சியில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஹட்சன் வீதியைச் சேர்ந்த வாய்பேச முடியாத பொதுமகன்.

1989-ம் ஆண்டு மாதகலில் தேசவிரோதிகள் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப், வெற்றி (டேவிற் மரியன் அல்பேட்வின்வர் - யாழ்ப்பாணம். )

1991-ம் ஆண்டு நெடுங்கேணிப் பகுதியில் இனந்தெரியாதோரின் கைக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

சுபாகரன்/சுபா (கறுப்பன் கிருஸ்ணலிங்கம் - வினாசிக்குளம் - நெடுங்கேணி - மணலாறு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5476]

சிந்தனைக்கு

உத்தமச் செயல்களை செய்ய நினைத்தால்
அதை உடனடியாகச் செய்வதே சிறந்தது
— சிறி அரவிந்தர் —

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 26- 11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## இராணுவத்தின் மீது சந்தேகம்

"சிறீலங்கா அரசிற்கு எதிராக ஆயுதப் படையினர் மத்தியில், உள்ள சில சக்திகளைக் கொண்டு சதி ஒன்றை நடத்த முயற்சிப்பது வெற்றியளிக்கும் பட்சத்தில் தெற்கில் முடிவில்லாத துன்பம் தொடரும், வடக்கு - கிழக்கில் தனிநாடு உருவாகும் இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் டயன் ஜயத்திலக்கா 'சண்டே ஒப்சேபர்' பத்திரிகையில் எழுதிய விமர்சனக் கட்டுரையில் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் வெறுமனே, இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து இவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளார் எனக் கூறிவிட முடியாது. எங்கோ இது தொடர்பான எச்சரிக்கை அவருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அல்லது. அடிமனத்தை இவ்விடயம் அச்சுறுத்தியுள்ளது. இந்நிலையிலேயே அவர் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளார் எனலாம்.

ஆனால், சிறிலங்கா அரசியலின் வளர்ச்சிப் போக்கில்இவ்வாறானஒருநிலைஉருவாவதுதவிர்க்க முடியாத ஒன்று என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இதனை ஜனாதிபதியின் ஆலோசகர் டயன் ஜயத்திலக்காவின் எச்சரிக்கையோ, அன்றி ஆலோசனையோ தடுத்து நிறுத்திவிடப் போவதில்லை.

'ஜனநாயக ரீதியான' ஆட்சி முறைகளின் கீழ் இராணுவத்திற்கு பெரும் முக்கியத்துவம் அளிப்பதும், பின்னர் இராணுவத்தின் பிடிக்குள் ஆட்சியாளர்கள் சிக்கித் திணறுவதும் உலக வரலாற்றில் புதுமையான விடயம் ஒன்றல்ல. பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பேரு போன்ற நாடுகளின் இன்றைய நிலையே இவற்றிற்குச் சிறப்பான உதாரணங்களாகும். இன்று, இதே நாடுகளின் பாணியில் வளர்ந்து வரும் சிறிலங்காவின் அரசியலும், இராணுவமும், பொருளாதாரமும் இதே நிலையை அடைவதென்பது இலகுவில் தடுத்து நிறுத்தி விடமுடியுமா என்பது கேள்விக்குரியதே.

சிறிலங்கா இராணுவம் குறுகிய காலப் பகுதிக்

# 'புக்காரா' விமானக் கொள்வனவு; ஒழுங்கு விதிகளுக்கு முரணானது

(கொழும்பு)

நான்கு புக்காரா யுத்த விமானங்களை ஆர்ஜன்ரீனா நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் கடந்த வியாழனன்று மாலை 8.30 மணியளவில் கொழும்பில் கைச்சாத்தாகியது. இந்த விமானங்களின் விலை 100 லட்சம் அமெரிக்க டொலர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

கேள்விப் பத்திர ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக இந்த விமானப் பேரம் இடம் பெறாததால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக் கூடிய அதிகாரி ஒருவர் முதலில் கைச்சாத்திட மறுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விமானத்தின் இயந்திரம் மற்றும் உதிரிப் பாகங்கள் இப்போது உற்பத்தி செய்யப்படாததால் இந்த ஒப்பந்தம் ஒழுங்கு விதிகளுக்கு மாறானது என்றும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புக்காரா ரக விமானங்களின் உற்பத்தி 1986-ல் நிறுத்தப்பட்டது.

உலகில் மொத்தம் 48 புக்காரா விமானங்களே பாவனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச பாதுகாப்பு வாராந்த சஞ்சிகை "உலக விமானங்கள் 91—92" என்ற கட்டுரையில் 1986இன் பின் புக்காரா விமானங்கள் எந்த நாட்டிற்கும் விற்பனை செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கிறது.

விமானப்படையில் சிலர் புக்காரா விமானங்களுக்குப் பதிலாக பிரேசிலில் தயாரிக்கப்பட்ட துக்கானா விமானங்களை விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது புக்காரா விமானங்களைத் தரைத்தாக்குதல் ஒன்றுக்கு மட்டுமே பாவிக்க முடியும் என்று நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள் துக்கானா விமானம் பயிற்சிக்கும் தரைத்தாக்குதல் ஆகிய இரண்டிற்கும் பாவிக்கலாம் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் புக்காரா விமானம் ஒரு மணிநேரம் பறப்பதற்கு 408 அமெரிக்க டொலர் செலவாகிறது. ஆனால் துக்கானாவிமானத்துக்கு 110அமெரிக்க டாலர் செலவாகிறது

புக்காரா விமானங்களை திருத்தும் வேலையை பிரான்சில்அல்லதுஆர்ஜன்ரீனாவில் தான் செய்ய முடியும்.

## மாவீரர் வாரத்தின் சிரமதானப் பணிகள்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடாத்தும் மாவீரர் வார சிரமதான நிகழ்வில் இன்று சிரமதான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள இடங்கள்:

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க ஒழுங்கைய வீதியை துப்பரவு செய்ய உள்ளது.

சாவகச்சேரி நகரசபை அலுவலக வளவை துப்பரவு செய்வதுடன் மயானத்திலும் மரங்களை நாட்ட உள்ளது. நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி மயானம், கொக்குவில் மயானம் என்பனவற்றையும் வலிகிழக்கு பிரதேச சபையினால் ஆவரங்கால்- வல்லை வீதி, விக்னேஸ்வரா ச.ச. நிலைய வீதி, அச்சுவேலி, ஆவரங்கால் சந்தி வெள்ளவாய்க்கால்,புத்தூர்- சாவகச்சேரி, புத்தூர் - ஆவரங்கால் வீதி, வெள்ளவாய்க்கால்- நீர்வேலி தெற்கு மயானம், கூத்தாடுவான் குளத்தடி குத்துணி மயானம், வேம்பன் மயானம் என்பனவும் துப்பரவு செய்யப் பட உள்ளது.

வலி-மேற்கு பிரதேச சபையினால் சத்தியக்காடு சந்தை முன்றல் பூவோடை மயானம், சங்கானை அலுவலக பொது வளவு, வழுக்கையாறு மயானம் என்பனவும், வலி- வடக்கு பிரதேச சபையினால் அளவெட்டி சந்தைவளவு, அளவெட்டி நூல் நிலைய வளவு ஆகியனவும் துப்பரவு செய்யப்பட உள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையினால் தலைமையலுவலகத்தில் மரம் நாட்டப்பட உள்ளது.

பருத்தித்துறை நகரசபையினால் வீதி சிரமதானம் செய்யப்பட உள்ளது.

கட்டடத் திணைக்களம் கோப்பாய், நல்லூர், உடுவில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் தத்தமது அலுவலக சுற்றாடலை துப்பரவு செய்ய உள்ளன.

கரவெட்டி அஞ்சலகம் தம், முன் வீதியின் ஒரு பகுதியை துப்பரவு செய்ய உள்ளது.

## சம்பளம் இல்லை

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் மதுவரித் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதகாலமாக மாதாந்த சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது. (35)

## திருமலை மாவட்ட மாவீரர் நினைவுகூரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் திருமலை மாவட்ட மாவீரர் பணிமனையினால் ஒழுங்கு செய்யப்பட்ட "திருமலை மாவட்ட மாவீரர்களை நினைவு கூர்தல் நிகழ்வுகள்" நேற்றுவரை நடைபெற்றன.

இந் நிகழ்வுகளில் தினமும் காலை 9 00 மணிக்கு போராளிகளின் உறுதி மொழி (சத்தியப்பிரமாணம்) ஏற்கும் நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டு,தேசியக் கொடிக்கு வணக்கம்

தமிழ்த்தாய் வணக்கப் பாடலுடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவெய்த, மாலையில் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் 810பேர்; கெயர் உதவி கிடைத்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் கெயர் விவசாய உதவித் திட்டம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக மொத்தமாக 810(எண்ணூற்றிப்பத்து)

நிலப் பயிர்செய்கைக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 500, (ஐந்நூறு) ஏக்கரில் நெற்பயிரும் 250 (இருநூற்றைம்பது)ஏக்கரில் மேட்டு

## எங்கள் தலைவன் என்றும் வாழி



உலகம் முழுவதும் இவனின் பேச்சு
இன விடுதலையே இவனின் மூச்சு
காலம் இவனிற்கு கட்டளை இட்டதால்
கலாஸினிக்கோவினை கையில் எடுத்தான்,

கடமை ஒன்றே கண்ணாய் நின்றான்
கரந்தடி படையொன்று திரட்டிக் கொண்டான்
கழுத்தில் நஞ்சைக் கட்டிக் கொண்டான்
களத்தில் சாதனை ஆயிரம் படைத்தான்.

சிங்களர் படைகள் சிதறிடச் செய்தான்
சிறுத்தை அணிகள் பெருகிட வைத்தான்
எங்கள் தமிழினை வளம்பெற செய்தான்
எங்கள் தலைவனாய் மனங்களில் உயர்ந்தான்.

புதுயுகம் ஒன்று பிறந்திட உழைத்தான்
புலிக்கொடி எங்கும் பறந்திட வைத்தான்
நன்றே செய்யும் எங்கள் தலைவன்
என்றும் என்றும் வாழிய வாழியவே.

—இ. திருமாறன்

## வாழ்க நூறாண்டு!



வருடம் ஒருநாள்
வருமிந்தத் திருநாள்
வாழ்வில் நூறுமுறை வர
வாழ்த்துகிறோம் வாழ்க

வித்தாக விதைத்த
விடுதலை எண்ணம்
விழுதுகள் பல விட்டு
விருட்சமென ஆகி...
அதனால்
வருடம் ஒரு நாள்
வருமிந்த திருநாள்
வாழ்வில் நூறுமுறை காண
வாழ்த்துகிறோம் வாழ்க

ஆல் போல் தழைத்தும்
அறுகு எனவே வேர்விட்டும்
தாயக விடியலை தாகமாய்
கொண்ட
பாயும் புலிகளின் படை
யினை நடத்தும்
நாயகன் நீங்கள்

வருடம் ஒரு நாள்
வருமிந்தத் திருநாள்
வாழ்வில் நூறுமுறைகாண
வாழ்த்துகிறோம் வாழ்க!

— இளையவன்

நீங்கள்

பிறந்த



கேள்விக்குரியதே.

சிறிலங்கா இராணுவம் குறுகிய காலப் பகுதிக்குள் ஊதிப் பெருத்து விட்டது. தேசிய வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு பெரும் தொகையைஇராணுவத்திற்கென அரசு ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இராணுவம் தொடர்ந்தும் தோல்விகளைச் சந்தித்து வருவதினால், இராணுவத்தினுள் அதிருப்தியாளர்கள் வளர்ந்து வரும் நிலையும் உருவாகியுள்ளது. அதேவேளை, ஆயுதப்படையினருக்கு இடையிலுள்ள அதிகாரப் போட்டி காரணமாக தளபதிகள் மட்டத்தில் முரண்பாடுகள் தீவிரமாகியும் வருகின்றன. அத்தோடு, இத் தளபதிகளின் அதிகாரப் போட்டியின் பின்னணியில் சில அரசியற் சக்திகளும் உள்ளன.

இதேவேளை, இராணுவத்தினர் அரசியல் வாதிகள் மீதிருந்தநம்பிக்கையையும்இழந்து விட்டனர். தொடர்ந்து வரும் தோல்விகளும், இராணுவத்தினரின் இழப்புக்கள் குறித்து கவலை கொள்ளாது அரசியல் வாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இதற்குக் காரணமாவதோடு, அரசினால் இராணுவத்தினரின் முழுமையான கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையும் உருவாகிவருகின்றது.

இந் நிலையில், இராணுவத்தினர் அரசியல் வாதிகள் மீது வெறுப்புக்கொண்டு ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்த, அன்றி முழுமையாகக் கைப்பற்ற முயலுவதும், அதனை சில அரசியல் வாதிகள் பயன்படுத்த முற்படுவதும், அதனால், அனர்த்தங்கள் விளைவதும் தவிர்க்க முடியாததொன்றே. ஆனால், இதற்கு முழுமையாக விரக்தியின் விளிம்பில் நிற்கும் இராணுவத்தை குற்றம்சாட்ட முற்படுவதும் மக்களை எச்சரிக்க முற்படுவதினாலும் இலாபங்கள் கிட்டிவிடப் போவதில்லை.

இதற்கு அரசியல் வாதிகளே முழுப்பொறுப்பும் ஏற்கவேண்டும்.அவர்கள் மக்களின் எதிர்காலத்திலும், இலங்கையின் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டிருப்பின் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து சிங்கள மக்கள் துன்பமடைய வேண்டிவரும். தமிழீழம் உருவாகும் என எச்சரிப்பதால் பிரச்சினைகளோ, ஆபத்துக்களோ தீர்ந்துவிடப்போவதில்லை அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்படுவதன் விளைவை இப்பொழுதாவது புரிந்து கொண்டால் ஓரளவு அரசியல் வாதிகளுக்கு நன்மை கிட்டக் கூடும்.

யக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களினால் இசைக்கப்பட்ட தேசிய கீதத்தை தொடர்ந்து; மலரஞ்சலி,மௌன அஞ்சலிசெலுத்தி

மாக 810(எண்ணூற்றிப்பத்து) குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது இதில் 310 (முந்நூற்றிப்பத்து) குடும்பங்களுக்கு நெற் செய்கைக்கும், 500 (ஐந்நூறு) குடும்பங்களுக்கு மேட்டு

நூற்றைம்பது)ஏக்கரில் மேட்டு நிலப்பயிரும் செய்வதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளதால் கிளிநொச்சி விவசாயிகள் பெரிதும் நன்மை அடைகின்றார்கள்.

## இராமர் கோயில் விவகாரம்

# ஜெயலலிதாவின் நிலைப்பாடு குறித்து தமிழகத் தலைவர்கள் கண்டனம்

(டில்லி)

தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அயோத்தி இராம ஜென்ம பூமி - பாபர் மசூதி சப்பந்தமாகத் தெரிவித்த கருத்துக்களுக்குதமிழகத்தலைவர்கள் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில், செல்வி ஜெயலலிதா இந்த விவகாரத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் கருத்துக்களைப் பிரதிபலிப்பது துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிடப் பண்பாட்டின் பாதுகாவலர் என்று சொல்லிக்கொள்ளும் அவர், பாரதீய ஜனதாக்கட்சியின் ஊதுகுழலாக மாறியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கும் வாழப்பாடி, செல்வி ஜெயலலிதா இந்தக் கருத்துக்களை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுடில்லி தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் பிரச்சினைக்குரிய கரசேவையை அனைத்துக் கட்சிகளும்கண்டித்திருக்கும்வேளையில் செல்வி ஜெயலலிதா ஒருவர்தான் பாரதீயஜனதாக்கட்சிக்கு ஆதரவாகக் குரல்கொடுத்திருக்கிறார் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஆர். நல்லகண்ணு சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில்;

முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்த கருத்து அவரது கொள்கை மாற்றத்தையே குறிப்பிடுகிறது எனவும், இது வகுப்புக்கலவரத்தைத் தோற்றுவிக்கும் என்றும் அச்சம்தெரிவித்திருக்கிறார்.

## அயோத்தி விவகாரத்தில் பிரதமருக்கு முழு அதிகாரம்

(டில்லி)

அயோத்தியா விவகாரம் தொடர்பாக வகுப்பு ஒற்றுமையும், சட்டம் ஒழுங்கும் குலையாமல் பாதுகாக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்குப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் தேசிய ஒருமைப்பாட்டு சபை கூடியபோது பிரதமருக்கு இத்தகைய அதிகாரம் வழங்குவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா பாபர் மசூதி வளாகத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாக்கும் அதே சமயம் கரசேவையும் அனுமதிக்கப் படலாம் என்று ஆலோசனை கூறினார்.


இந்தத்தேசியஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தைப் பாரதீய ஜனதாக்கட்சி, விஷ்ப இந்து பரிஷத், உத்திரப் பிரதேச மாநில அரசு என்பன புறக்கணிப்பு செய்திருந்தது தெரிந்ததே.

## விமான விபத்து 141 பேர் பலி

(பீகிங்)

சீனாவில் நடந்த விமான விபத்தொன்றில் 131 பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

போயிங் 737 பயணிகள் விமானம் லுவாங்கோவில் இருந்து நாட்டின் தென்கிழக்குப் பகுதியான கிலிங் என்ற இடத்துக்குச் சென்று கொண்டிருக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது. கிலிங் நகரத்துக்கு வெளியே மலை ஒன்றின் மீது விமானம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## நாளன்றோ?

மண்ணில் பிறந்த மாமணியே — தமிழ்
மகள் பெற்ற தனிச்சுடரே!
கண்ணில் கலந்த காவியமே — எம்மைக்
காத்திட வந்த எழில் மகனே!

'பிரபா' என்னும் பெருமகனே! — நீங்கள்
பிறந்த மண்ணிற் பெருமையன்றோ?
உரமே உடலாய்ப் பெற்றவரே — உங்கள்
உயிரே மக்கள் மூச்சு அன்றோ?

உலகத் தமிழர் நிமிர்ந்து நிற்க — விழி
உறக்கம் துறந்து வாழ்பவரே!
விலங்கை உடைக்க வந்தவரே! — எம்
வாழ்வை ஒளிரச் செய்தவரே!

நீங்கள் பிறந்த நாளன்றோ — இது
நெருப்பு வெடித்த நாளன்றோ?
ஏங்கும் மக்கள் வாழ்வினிலே — ஒளி
ஏற்றும் சிறந்த நாளன்றோ?......

வாழ்க! வாழ்க! வாழியவே! — என்றும்
வலிமை பெற்று வாழியவே!
சூழ்க! மண்ணில் சோதியது! — அந்த
சுகத்தை அடைவோம்; நாங்களும்மால்!

கவிஞர். மு, வே. யோ. வாஞ்சிநாதன்

## அமுதிலும் இனிய தமிழுக்கு இனிதிலும்இனிய தலைவன்

கார்த்திகை பூவொன்று பூத்திங்கு வந்தது.
புது ஈழம் அமைக்கவே புகுந்திங்கு வந்தது.
கடல் அலையோடு ஓசையாய் எழுந்திங்கு நின்றது.
களம் பல கண்டு திறம்பட வென்ற
காவியம் இன்று - அக்
கார்த்திகைப் பூவது பூத்த நாள் இன்று
புது ஈழம் அமைக்க புகுந்த நாள் இன்று
நாவிற்கு இனிய தமிழ் நற்சுவைப் பாட்டிசைத்து
தேனிலும் இனிய குரல் தென்றலோடு இசைக்க-எம்
தேவனை வாழ்த்தி ஒரு கவி பூபாளம் பாடி நிற்க,
அமுதிலும் இனிய தமிழிலே இனிதிலும் இனிய
தலைவனை வாழ்த்தி இன்னொரு பிறவி நான் எடுப்பேன்
என்னுயிரே நீ வாழ்க இனிதொரு தமிழ் வாழ்க

காலையூர் ஜீவன்

(இன்று (26-11-1992) தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் 39-வது பிறந்ததினம் ஆகும். அதையொட்டி இச் சிறப்புக்கவிதைகள் பிரசுரமாகின்றன.)

ஈழநாதம்

# மூதூர் பகுதி விவசாயிகள் பயிர் செய்ய முடியாது அவதி

(மூதூர்)

மூதூர் பிரதேச தமிழ் விவசாயிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நெற்செய்கையிலும் ஏனைய விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத நிலையில் இருந்து வருவதாக தெரிய வருகிறது.

அல்லைத் திட்டத்தின் மூலம் சுமார் நாற்பது ஆயிரம் ஏக்கர் நிலம் மகாவலி ஆற்று நீரைப் பெறக்கூடிய நிலையில் இருக்கும் போதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் மற்றும் முஸ்லிம் காடையர்களின் அடாவடித்தனங்கள் என்பவற்றினால் உழவுத் தொழிலில் ஈடுபட முடியாத நிலையில் இருப்பதாக தமிழ் விவசாயிகள் கூறுகின்றனர்

மேலும், கடந்தகால வன்செயல்களின் விளைவாக இப்பிரதேச விவசாயிகள் பலர் தங்கள் இயந்திர சாதனங்களையும், கால்நடைகளையும் இழந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் விவசாயக்கடன் தமிழ் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை எனவும், புதுரக விதை நெல்லினங்கள் கிடைப்பதில்லை எனவும், விவசாயத் தேவைகளுக்கான கிருமிநாசினிகள், உரவகைகள், களைகொல்லிகள் என்பன உரிய காலத்தில் கிடைக்கப்பெறுவதில்லை எனவும் கூறப்படுகிறது.

இதனால் நெற் களஞ்சியம் என அழைக்கப்பட்ட வளம் மிக்க மூதூர் பிரதேச விவசாயிகள் குறிப்பாக தமிழ் விவசாயிகள் தொழில் வசதியின்றியும், வருமானமின்றியும் பெரும் இன்னல்களுக்கு இலக்காகி வருவதாகக் கூறப்படுகின்றது.

## இதய அஞ்சலி

12 - 11 - 1992 அன்று அமரரான திரு. சு. தங்கவேலு முதலி அவர்கட்கு எமது இதய அஞ்சலிகள்.

சிந்தையிற் கனிவு ஊறச்
செய்கையிற் பணிவு சேர
வந்து நீ சேவையாற்றி
வார்த்தையால் ஊக்குவித்த
விந்தையை எண்ணி எண்ணி
விழிகளில் அருவி பொங்கச்
சிந்தையால் அஞ்சலித்துச்
செய்கையை நினைத்து நிற்போம்

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக்கழகம்,
முதன்மைச் செயலகம்,
தாவடி- தமிழீழம்.

(சி- 5481)

## மரண அறிவித்தல் மாற்றம்

### காசிலிங்கம் விஜிந்தன்
### கப்டன் மலரவன் (லியோ)

25-11-92 அன்று நடைபெற இருந்த நிகழ்வு 26-11-92 (இன்று) காலை அன்னாரின் புகழுடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

435, இராமலிங்கம் வீதி. (சங்கீதா வீதி)
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (3709)

## அறிவித்தல்

சகல தென்கு பனம் பொருள் கூட்டுறவு
சங்கங்களுக்கும், கொத்தணிகளுக்கும்

## தமிழீழ

அரசஅலுவலகங்கள், பொதுஸ்தாபனங்கள், பாடசாலைகள் என்பவற்றில் நினைவுச் சுடர் ஏற்றவுள்ளனர்.

சுடரானது சுவாலைவிட்டு எரியும் ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்களும் பிரகாசிக்கும் தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப் பரவும் சுடர் ஏற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழம் எங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிர வேண்டும் என விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்:

## கைது

யவர் எனவும், இவர் கைக்குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்ட வீடு முன்னாள் அமைச்சரான சிறில் மத்தியூவிற்கு சொந்தமானது எனவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## மாவீரர்

வீதிகள் எங்கும் வர்ணமின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மாவீரர் துயிலும் இல்லத்தின் உள்ளக மைதானத்தில் தமிழீழ தேசியக் கொடி இரைக்கமபத்தில் ஏற்றப்பட்டிருந்தது. இங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இவர்கள் போராளிகளது சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

இவற்றைவிட கல்வியங்காட்டில் பிரதான வீதியின் குறுக்காக பிரமாண்டமான தமிழீழப் படம் ஒன்று வரையப்பட்டு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. போராளி ஒருவர் களத்தில் வீரச்சாவடையும் போது அப்போராளியினது படைக்கலத்தை இளம் போராளிகள் சிலர் பற்றிக்கொள்ளும் காட்சியை சித்திரிக்கும் ஓவியம் ஒன்றும் அதில் வரையப்பட்டிருக்கிறது. (க)



## "மாவீரர் வார சிந்தனை"

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

# மேலும் 10 போராளிகள் வீரச்சாவு



கப்டன் செல்வி (தனா)
செபஸ்ரியாம்பிள்ளை
மேரி ஜசிந்தா
புலோப்பளை, பளை.



லெப்டினன்ட்
தேனருவி (ரஜித்தா)
ராமச்சந்திரன் மீரா
நுணாவில், சாவகச்சேரி.



2ம லெப்டினன்ட்
வல்லத்தரசு
(மொறிஸ்)
சோமசுந்தரம் நல்லச்சந்திரன்
வி எம்.றோட், பருத்தித்துறை



2-ம் லெப்டினன்ட்
ஜீவராணி
பச்மநாதன் நந்தினி
மட்டுவில் தெற்கு சாவகச்சேரி



2-ம்லெப்டினன்ட்
காயத்திரி
கோவிந்தன் தவச்செல்வி
தொண்டமனாறு.



வீரவேங்கை
நர்மதா (நெல்சா)
செல்லத்துரை பராசக்தி
ஏழாலை மத்தி, ஏழாலை,



வீரவேங்கை பத்மா
விநாயகம் வசந்தி
கிரான், மட்டக்களப்பு.



வீரவேங்கை நிதி
தர்மலிங்கம் உதயராணி
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.



வீரவேங்கை குறமகள்
முத்துக்குமாரு இந்துமதி
மறவன்புலோ, தனங்கிளப்பு,
சாவகச்சேரி.



## வீரச்சாவு

## சகல தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களுக்கும், கொத்தணிகளுக்கும்

மாவீரர் வார இறுதி நாள் நிகழ்வின் தொடர்பில் 26-11-92-ம் திகதி சங்க, கொத்தணி மட்ட நிகழ்வுகளுக்கமைவும், 27-11-92-ம்திகதி முற்றாகவும் சங்கங்களின் கிளை நிலையங்களின் விற்பனைகளை நிறுத்தி மாவீரர் வார இறுதி நிகழ்ச்சிகள் சிறப்புற ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்.
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
499. காங்கேசன்துறை வீதி.
(யாழ்ப்பாணம்)

(சி-5483)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 11 – 01 – 1939



உதிர்வு: 26 – 11 – 1989

### அன்ரனி சேம்பாலேன்

அன்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
விண்ணுலகெய்திய அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
மூன்றாண்டுகள் மறைந்தாலும்
உங்கள் அன்பு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்திருக்கும்.

26 - 11 - 92 (வியாழக்கிழமை) இன்று காலை 6.30 மணிக்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல நாயகி ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

மாதகல்.

[சி-5448]

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது எனது வாழ்விடமாய் திகழ்கிறது''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் எனக்கு சுவையான உணவைத் தந்து என்பசியைத் தீர்த்துவைக்கிறது''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகின்றது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் நான் களைத்திருக்கும் போதெல்லாம் எனக்கு படுக்கையாக அமைகிறது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் நான் அயர்ச்சியடையும் போது தனது அற்புதமான இயற்கை எழிலால் எனக்குப் புத்துயிரூட்டுகிறது.''

''தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்''

(சி/5477)

## வேலை வாய்ப்பு

### உள்ளக கணக்குப் பரிசோதகர்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. க. பொ. த. [உயர் தரம்] பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது 3 வர்த்தக பாடங்களில சித்தி பெற்றிருக்கவேண்டும்.
2. கணக்கியலில் உயர் தேசிய டிப்புளோமா. [Diploma in Accountancy[ சான்றிதழ் அல்லது சீ. ஐ. எம். ஏ [C. I. M A] பகுதி 1-3 சான்றிதழ்
   அல்லது
   அரசாங்க / தனியார் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள். ஆகக்குறைந்தது பத்து வருடம் கணக்குப் பகுதிகளில் வேலைசெய்த அனுபவம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 05-12-92 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பரம் இல. 178
மே/பா, ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

[சி-5480]



வீரவேங்கை கௌதமி

அம்பலம் சஜீக்கா
விஸ்வர் கமம், கரடிபோக்கு,
கிளிநொச்சி.

## வீரச்சாவு



கடற்புலி கப். முரசு



லெப். மாணிக்கதாசன்


23 - 11 - 92 அன்று பலாலிப் பகுதியில் இடம்பெற்ற பெரும் மோதலில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் நேற்று வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த கடற்புலி கப்டன் முரசு (அம்பிராசா லோகிதன்- 5 ஆம் வாய்க்கால் பன்குளம், திருமலை), லெப்டினன்ட் மாணிக்கதாசன் /மாணிக்கதாஸ் (இராசுநாகேந்திரன்-தச்சன்குளம், குணநாயகம் தோட்டம், கோயிற்குளம் வீதி, வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகள்தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வீரச்சாவடைந்த மூன்று புலிகள்



மேஜர் தமிழரசன் (ஜோச்சன)



மலப. லைமகஸ



வீரவேங்கை வேணி

நேற்று வெளியான ஈழநாதம் பத்திரிகையில் பலாலி மோதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் படங்களில் மூன்று, ஒரு தொகுதிப் பத்திரிகையில் இடம்பெறவில்லை. அச்சுப்பதிவின் போது ஏற்பட்ட இடர்பாடே இவ்வாறு இடம்பெறாமைக்குக் காரணமாகும். அம் மூன்று போராளிகளினதும் படங்களை விபரங்களுடன் தருகின்றோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.